**பொருளாதார வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ள**
**புலம்பெயர் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிசெய்வோம்.**
**2022 டிசம்பர் 18**
**சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை இவ்வாறு நினைவுகூருவோம்.**

2000 ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் பிரகடனம் செய்யப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களின் சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை இருபத்திமூன்றாவது தடவையாக கொண்டாடுகிறோம். நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு விஷேட பங்களிப்பை வழங்கும் புலம்பெயர் தொழிலாளர்களை பாராட்டுவதற்காக நாம் ஒவ்வோர் ஆண்டும் சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை கொண்டாடுகிறோம். புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள், மனித உரிமைகளாக கருதப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் அந்த பிரகடனத்தை அங்கீகரித்து, புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தில் அந்த நாடுகள் கையொப்பமிட்டு அது சர்வதேச ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையும் அந்த சர்வதேச சமவாயத்தில் கையெழுத்திட்டுள்ளது. அதன் மூலம் அந்த சமவாயத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள புலம்பெயர் தொழிலாளர் உரிமைகள் உள்நாட்டிலும் அங்கீகரிக்கப்பட்டதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், அந்த சமவாயத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளும் தேசிய ரீதியில் அமுல்படுத்தப்படவில்லை என்பதுடன் அதிலுள்ள சில ஏற்பாடுகளை இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு ஏற்புடையதாக்குவதற்கு உரிய சட்ட ரீதியான ஏற்பாடுகள் இதுவரை உருவாக்கப்படவில்லை என்பதனையும் குறிப்பிட வேண்டும். அத்துடன் உரிமைகளுடன் தொடர்புடைய பொறுப்புக்கள் அனைத்து பிரஜைகளுக்கு உள்ளது என்பதனையும் குறிப்பிடும் அதேவேளை பிரஜைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படாமல் பிரஜைகளின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான பலம் மற்றும் நம்பிக்கை உருவாகாது என்பதனையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

புலம்பெயர் தொழிலாளர்களின் உழைப்பிலிருந்து கிடைக்கும் அந்நிய செலவாணி இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு விஷேடமாக பங்களிப்பு செய்கிறது. கடந்த சில ஆண்டுகளில் அந்த தொகை 7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. கொவிட் - 19 தொற்நோயின் தாக்கம் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி ஆகியவற்றால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறை மிகவும் பாதகமாக தாக்கமடைந்தது. இலங்கை பொருளாதாரத்துக்கு சேவைத் துறையில் ஆகக்கூடிய பங்களிப்பை வழங்கிய வெளிநாட்டு தொழில்வாய்ப்புத் துறையில் உள்ள புலம்பெயர் தொழிலாளர்கள் தமது தொழிலை திடீரென அல்லது மிகவும் குறுகிய காலப்பகுதியில் இழந்ததுடன், அதன் தாக்கமாக புலம்பெயர் தொழிலாளர்களும், அவர்களது குடும்ப உறுப்பினர்களும் மிகவும் அநாதரவான நிலைக்கு தள்ளப்பட்டனர். தற்போது வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதார நிலையில் அவர்களது தொழிலுக்கான நிச்சயத்தன்மை மற்றும் பாதுகாப்பு அற்றுப் போயுள்ளது. அதன் காரணமாக நாம் புலம்பெயர் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுப்பது இந்த சந்தர்ப்பத்தில் முன்னுரிமை வழங்க வேண்டிய தேவையாகும் என்பதுடன், அது வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்துக்கு மீள உயிரூட்டுவதற்கு பெரிதும் பங்களிப்பு செய்யும்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில், அவர்களது வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள சூழமைவில் 2020/2021 ஆண்டிலும் 2022 ஆண்டிலும் புலம்பெயர் தொழிலாளர் தினத்தை கொண்டாட வேணடியுள்ளது. இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள காலத்தில் வெளிநாட்ட வேலைவாய்ப்பு அற்றுப்போதல் புலம்பெயர் தொழிலாளர்களுக்கும், நாட்டுக்கும் தாங்கிக்கொள்ள முடியாத தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாகும்.

தற்போது வெளிநாட்டு தொழிலுக்கு சென்று திரும்பிய இலங்கை தொழிலாளர்களை மீண்டும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு அனுப்புதல் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஏற்கனவே கலந்துரையாடி வருகிறது. அத்துடன், அவர்களது தொழில் திறனை அதிகரிப்பதற்கும், தொழிலுக்கான தகைமைச் சான்றிதழ் பெறுவதற்கு உகந்த முறைமையை உருவாக்கி மிகவும் சிறந்த தொழில் வாய்ப்புகளுக்கு அவர்களை அனுப்ப வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என தெரிவிக்க விரும்புகிறோம்.

விஷேடமாக புலம்பெயர்ந்த பெண்கள் மற்றும் இளவயதினர் தமது பொருளாதார வறுமையிலிருந்து மீளுவதற்கான வழி தேடும் எதிர்பார்ப்புடன் Visit visa (குறுங்கால புலம்பெயர்வு வீசா) மூலம் வெளிநாடுகளுக்கு சென்றார்கள். இருப்பினும், அவர்களது எதிர்பார்ப்பு நொறுங்கிப் போயுள்ளது. அவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு முகங்கொடுத்தல், பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாதல் போன்ற சம்பவங்கள் தொடர்பான செய்திகள் கடந்த சில மாதங்களில் ஊடகங்களில் வெளிவந்தன. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாழ்க்கை செலவை ஓரளவுக்காவது தாங்கக்கூடிய பொருளாதார நிலையை உருவாக்குவதற்கான கனவுடன் மட்டுமே இந்த துன்பியல் சம்பவங்களுக்கு அவர்கள் முகங்கொடுக்கின்றனர்.

புலம்பெயர் தொழிலுக்காக சட்ட ரீதியான பொறுப்பு எதுவுமின்றி வெளிநாட்டுக்கு சென்ற போதிலும், அவர்கள் இலங்கை பிரஜைகள் என்பதனால் அவர்களது மனித உரிமைகளை பாதுகாத்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகும் என நாம் அழுத்தி உரைக்கிறோம். அவர்கள் சென்ற நாட்டிலும் அவர்களது பாதுகாப்பு தொடர்பான கடப்பாட்டு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். அவர்கள் உழைக்கும் பணம் எமது நாட்டுக்கே கிடைக்கிறது என்பதனையும் குறிப்பிட வேண்டும்.

அத்துடன் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மிகச்சிறந்த தொழிலை பெற்றுக் கொடுப்பதற்கு அரசு விரிவான திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அத்துடன், அந்நிய செலவாணியை நாட்டுக்கு ஈட்டித்தரும் இந்த புலம்பெயர் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் அல்லது சமூக பாதுகாப்பு முறைமையை நிறுவுதல் அரசின் பிரதான பொறுப்பாகும் என குறிப்பிடுகிறோம். அத்துடன், அவர்களது குடும்ப உறுப்பினர்களின் எதிர்காலத்தை பாதுகாத்தல் தொடர்பில் இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

பொருளாதார நிருக்கடிகளுக்கு மத்தியில் துன்பங்களுக்கு முகங்கொடுத்து இன்னும் வெளிநாடுகளில் அல்லலுறும் புலம்பெயர் தொழிலாளர்கள் அனுபவிக்கும் துன்பத்திலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களது உரிமைகளை பாதுகாத்து, அவர்கள் எதிர்பார்க்கும் தொழிலை புரிவதற்கு தேவையான பொறிமுறை மற்றும் பின்னணியை உருவாக்குதல் அரசினதும், எம் அனைவரினதும் பொறுப்பாகும். சர்வதேச புலர்பெயர்ந்தோர் தினத்தை கொண்டாடும் இந்த வேளையில் பின்வரும் விதந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்தி, அவற்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய அரச அதிகாரம் மிக்கவர்களிடம் தெரிவிக்கிறோம்.

1. வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையுடன் தொடர்புடைய அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உள்ளிட்ட அரச கட்டமைப்பில் பொறுப்பான உயர் அலுவலர்களை உள்ளடக்கிய தேசிய ஆலோசனை குழு நியமிக்கப்பட்டு புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் தற்போதைய நிலையை மேற்பார்வை செய்ய வேண்டும்.
2. தற்போது வெளிநாடுகளில் பரிதவிக்கும் தொழிலாளர்கள் தொடர்பில் கூடுதலாக கவனம் செலுத்தி, அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான முறைமையை உருவாக்க வேண்டும்.
3. அவர்களது தொழில் தகைமைகளை மேம்படுத்தி, அதற்கமைய புதிய நிச்சயிக்கத்தக்க தொழிலை வழங்குவதற்காக குறித்த நாடுகளுடன் சட்ட ரீதியான இருதரப்பு உடன்படிக்கைகள் செய்யப்பட வேண்டும்.
4. மீண்டும் வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் அநாதரவாக உள்ள பெண் தொழிலாளர்களை மீண்டும் சமூகமயப்படுத்தி, அவர்களது உடல் மற்றும் உள நிலையை மேம்படுத்துவதற்காக பொருத்தமான செயற்திட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.
5. 2020 வரவுசெலவு திட்ட முன்மொழிவில் நிறைவேற்றப்பட்ட வெளிநாட்டு தொழிலாளர்களுக்கான ஓய்வூதிய முன்மொழிவை விரைவாக அமுல்படுத்த வேண்டும்.
6. புலம்பெயர் தொழிலாளர்களுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள சமவாயங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை உள்நாட்டு சட்டங்கள் மூலம் வலுப்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான, கொள்கை மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.
7. புலம்பெயர் தொழிலுக்கான டிஜிற்றல் தளத்தை உருவாக்குதல் மற்றும் பாவனையை துரிதப்படுத்துதல் மற்றும் அதிலுள்ள தரவுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான முறைமையை உருவாக்குதல்.
8. தொழில்முயற்சி அபிவிருத்திக்கான வலையமைப்பை உருவாக்குதல்.
9. புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக அடிமட்டத்திலிருந்து அரச அலுவலர்களின் பிரதிநிதித்துவத்துடன் தன்னார்வ அமைப்புகள், சிவில் அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், தொழிற் சங்கங்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களையும் உள்ளடக்கிய குழு தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் உடனடியாக நிறுவப்பட வேண்டும். புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக தற்போதுள்ள அரச கொள்கைகள், சட்ட ரீதியான ஏற்பாடுகள், நிறுவன ரீதியான செயற்பாடுகள் உரிய வகையில் அமுல்படுத்தப்படுதலை மேற்பார்வை செய்வதல் மற்றும் உறுதி செய்வதற்காக அந்த குழுக்களின் நேரடி பங்களிப்பை பெற வேண்டும்.

பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு (Women and Media Collective )
லோயர்ஸ் பியொன்ட் போடர்ஸ் - இலங்கை - (Lawyers Beyond Borders - Sri Lanka)
தேசிய தொழிலாளர் சங்கம் - (National Workers Congress)
புலம்பெயர்ந்தோர் சேவை நிலையம் - (Migrant Services Center)
புலம்பெயர் தொழிலாளர்களுக்கான செயற்பாட்டு வலையமைப்பு - (ACTFORM)